திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்திலே மணிமுத்தாறு அணை கட்டுவதற்கு விவசாயிகளிடம் பணம் வசூல் செய்து குறிப்பிட்ட வருஷத்திலே அந்த அணை கட்டிய செலவுகளை தீர்வை மூலம் வசூல் செய்து கொள்ள வேண்டுமென்று அரசு முடிவு செய்து கொண்டது. ஆனால் இன்னும் நெல்லை மாவட்டத்தில் விவசாயிகளிடம் மணிமுத்தாறு அணை கட்டியதற்கு செஸ் வசூலிக்கப்படுவதை உடனடியாக அரசு நிறுத்துவதற்கு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 505 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டிருக்கிற இந்த அணைக்கு, செஸ் மூலமாக கிடைத்திருப்பது 48.53 இலட்சம் ரூபாய்தான். 10-லே ஒரு பங்கு கூட இன்னும் வசூலிக்கப்படவில்லை. ஆகவே இந்தக் கேள்விக்கு இடமில்லை.

சென்னையில் ஹஜ் விடுதி கட்டும் திட்டம்.

*வினா எண் 601—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் ஹஜ் யாத்திரியர்கட்கு பயன்பெறும் வகையில் பெரியமேடு பகுதியில் ஹஜ் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) ஆம்.

(ஆ) ஹஜ் விடுதி கட்டட வேலைகள் விரைவில் துவங்கப்பட இருக்கின்றன.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடம் எவ்வளவு மூலதனத்தில் கட்டப்படும்? பெட்ரோல் வளம் கொழிக்கும் சவுதி அரேபியாவில் இருக்கிற மெக்காவிற்கு நமது ஹஜ் யாத்ரீகர்கள் பெருமளவில் செல்வதால், இந்த விடுதியை கட்டுவதற்கு சவுதி அரேபியா அரசிடம் நமது அரசு உதவி கேட்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இக்கட்டிடத்தின் உத்தேச மதிப்பீடு 70 இலட்சம் ரூபாய் ஆகும். அது இங்கேயுள்ளவர்களாலேயே கட்டி முடிக்கப்படும் என்ற நம்பிக்கை இருக்கிறது. பிற நாட்டினுடைய உதவி இது விஷயமாக எதிர்பார்ப்பதற்கு இல்லை,

1982 மார்ச் 22]

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஹஜ் யாத்திரை சென்று ஹஜ் பட்டம் பெற்றவர்கள் அதிக அளவிலே இருக்கிற காரணத்தாலே, இதற்கு தேர்வு செய்யப்படுவதில் கடுமையான இஸ்லாமிய நிபந்தனைகள் பின்பற்ற அரசு உத்தேசிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் எந்த யாத்ரீகர் களை குறிப்பிடுகிறார்கள் என்று புரியவில்லை. அதை தான் யோசித்துக் கொண்டு இருந்தேன். பொதுவாக 2 ஆயிரம், 3 ஆயிரம் பேர்கள் விண்ணப்பித்தால் 700, 800 என்ற அளவுக்குத் தான் அனுப்புகிறோம். அதிலே உரிய விதிமுறைகள் எல்லாம் கடைபிடிக்கப்படுகின்றன.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விடுதி கட்டுவதற்கு எவ்வளவு இடம் 'அக்வீயர்' செய்யப்பட்டுள்ளது ? அந்த இடம் போதுமான அளவிற்கு 'அக்வீயர்' செய்யப்பட்டுள்ளதா ? நகரின் மத்திய பகுதியிலே இருக்கிற தீவு திடல் போன்ற இடத்திலே கட்டுவதற்கு மத்திய அரசினுடைய அனுமதி பெற்று அரசு கட்ட முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடம் கட்ட $8\frac{1}{2}$ கிரவுண்ட் நிலத்தை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆணையின் பேரிலே 'ஹஜ் இல்லம்' கட்டுவதற்காக அரசே, இனாமாக வழங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு 700 அல்லது 800 பேர்கள் என்று அறிவித்தார்கள். தமிழகம் முழுவதும் அநேகர் ஹஜ் யாத்திரை மேற்கொள்ள ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிற நேரத்திலே, இந்த ஆண்டாவது குறைந்தது 1,500 பேர் ஹஜ் பிரயாணம் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா ? மேலும், இந்த ஆண்டு ஹஜ் செல்லக்கூடியவர்களுக்கு வழிகாட்டிகளாக இருக்கக்கூடிய ஹஜ்காரர்களுக்கு அதிக இடம் அரசு ஒதுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இது அனைத்திந்திய அளவிலே ஒவ்வொரு மாநிலத்திற்கும் கோட்டா ஒதுக்கப்பட்டு அந்த எண்ணிக்கை அடிப்படையிலே தான் நாம் அனுப்புகிறோம். எனவே, அதிகமான பேர் ஆர்வம் காட்டி விண்ணப்பித்தாலும், அந்த விதிமுறைகளுடைய அடிப்

படையிலேதான் நாம் எண்ணிக்கையை நிர்ணயிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். மேலும் மெக்காவிலும், மதினாவிலும் தங்கக்கூடிய பயணிகளுடைய இட நிலைமையைப் பொறுத்து, நாம் நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது. நம் இடமே அங்கேயிருப்பதைத் திரும்பவும் பெற்று இங்கே இருக்கக்கூடிய யாத்திரிகர்கள் அங்கே போய் இன்னும் சிரமம் இல்லாமல் அந்தப் பயணத்தைச் சிறந்த முறையில் முடிக்க வேண்டுமென்பதற்காக நம்முடைய அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரியகுளம் கோட்டத்தில் பாசன வசதி செய்து தரும் திட்டம்.

*வினா எண் 602—திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் கோட்டத்தில் வைரவன் அணையிலிருந்து பெரியகுளம் வரை மேற்கு மலை அடிவாரத்தில் புன்செய் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் பதினெட்டாம் கால்வாய் திட்டத்தை நிறைவேற்ற அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) இத்திட்டம் தலைமைப் பொறியாளரின் (ஆய்வு) ஆய்வில் உள்ளது.

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான சம்பள விடுப்பு வசதி.

*வினா எண் 603—திரு. எஸ். டி. உகம் சந்த் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் உள்ள தொழிலாளர்களால் மற்ற ஆலைகளில் வழங்கப்படுவது போன்று தங்களுக்கும் ஒரு மாத சம்பள விடுப்பு தேவை என்னும் கோரிக்கை அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) எல்லா கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலும் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களிலும் ஒரே மாதிரியான விடுப்புச் சலுகைகள் வழங்கப்படுவது குறித்து அரசு ஆய்ந்து வருகிறது.